மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 105/2022**

2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01-ஆம் தேதி வெள்ளிக்கிழமை

வா.சா.1 (கருப்புச்சாமி)

கு.வி (1ம் பிரதிவாதி தரப்பில்)

எனது தந்தை அழகரின் தகப்பனார் பெயர் மார்க்கண்டன் என்றால் சரிதான். மார்க்கண்டனின் மனைவி பெயர் ராக்கம்மாள் என்றால் சரிதான். மார்க்கண்டன், ராக்கம்மாளுக்கு எனது தகப்பனார் அழகர், நாகம்மாள், கருப்புச்சாமி, அய்யம்மாள், அழகிச்சி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கிற்கான விபரங்களை வழக்குரைஞருக்கு யார் சொன்னார்கள் என்றால் நான் தான் சொன்னேன். வழக்குடன் வம்சாவழி பட்டியலை ஆவணமாக தாக்கல செய்யவில்லை என்றால் சரியல்ல, நான் தாக்கல் செய்துள்ளேன். பிராது விபரத்தில் எந்தெந்த சொத்துக்கள் தாய்வழி சொத்துக்கள், எந்தெந்த சொத்துக்கள் தகப்பனார் வழி சொத்துக்கள் என்பதை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் சொல்லியுள்ளேன். நான் தாய்வழி சொத்து, தகப்பன் வழி சொத்து என்று இவ்வழக்கில் பிரித்துக்காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. சொத்துவிபரத்தில் எந்தெந்த சொத்துக்கள் ராக்கம்மாள் வழியில் வந்தது, எந்தெந்த சொத்துக்கள் மார்க்கண்டன் வழி வந்தது என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் படிக்காதவன், எனக்கு தெரியவில்லை. பிராது சொத்துவிபரத்தில் கண்ட சொத்துக்கள் மார்க்கண்டன், ராக்கம்மாளுக்கு எப்படி கிடைத்தது என்ற விபரம் பற்றிய ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அந்த ஆவணங்கள் அழகிச்சி என்பவரிடம் உள்ளது. 1ம் பிரதிவாதி நாகம்மாள் எனது தகப்பனார் உடன்பிறந்த மூத்த சகோதரி என்றால் சரிதனர். நாகம்மாள் மகள் மூக்காயியை நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மூக்காயியை இந்த வழக்கில் 6ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் மூக்காயிக்கும் திருமணம் நடந்து சுமார் 40 வருடங்கள் ஆகிவிட்டது. எங்களுக்கு 2 மகன்கள் உள்ளார்கள். நானும் மூக்காயியும் எத்தனை வருடங்களாக பிரிந்து வாழ்கிறோம் என்றால் சுமார் 20 வருடங்களாக பிரிந்து வாழ்கிறோம். பிராது விபரத்தில் நாகம்மாள் மற்றும் மூக்காயி பற்றிய

மேற்படி விபரங்களை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி நாகம்மாள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் நான் படித்து பார்க்கவில்லை. 3ம் பிரதிவாதி அய்யம்மாள் என்பவர் எனது தந்தையுடன் பிறந்த மற்றொரு சகோதரி என்றால் சரிதான். ராக்கம்மாள் என்பவர் உடன்பிறந்த சகோதரி மருதாயி என்றால் சரிதான். ராக்கம்மாள், மருதாயி ஆகியோரின் தகப்பனார் பெயர் மூக்கன் அம்பலம். ராக்கம்மாளின் தகப்பனார் மூக்கன் அம்பலம் வழியாக வந்து ராக்கம்மாளுக்கும் மருதாயியிக்கும் சேர்ந்து கூட்டுகுடும்பமாக இருந்ததால் சொத்துக்கள் கிடைத்தது. மருதாயியிக்கும் ராக்கம்மாளுக்கும் அவர்களது தகப்பனார் வழியில் எத்தனை இலக்க சொத்துக்கள் கிடைத்தது என்றால் அவர்களது தகப்பனார் வழியில் 7,8 சொத்துக்கள் கிடைத்தது. றேம்ப 7 இலக்க சொத்துக்களைத்தான் பிராது சொத்துவிபரத்தில் 1ம் லக்க செர்து என குறிப்பிட்டு வரிசை எண் 1 முதல் 7 இலக்க சொத்துக்களாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். மருதாயியின் சமபாக உரிமை சொத்தை விலக்காமல் சேர்த்து சொத்துவிபரத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், கூட்டுக்குடும்பமாக இருந்ததால் சொத்தை விலக்காமல் தாவா சொத்து விபரத்தில் காட்டப்பட்டுள்ளது. மருதாயிக்கு திருமணம் நடக்கவில்லை. 1ம் பிரதிவாதி நாகம்மாள் புல எண் 127/3ஏ1, 127/3 சொத்துக்களை 22.11.1989ம் தேதி பதிவு தான செட்டில்மெண்ட் மூலமாக வழக்கின் கண்ட 1ம் பிரதிவாதிக்கும் 3ம் பிரதிவாதி அய்யமாளுக்கும் அவர்களுடைய தாயார் நாகம்மாள் பதிவு செய்யப்ட்ட தான செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்திவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரம் நாகம்மாள் மகள் மூக்காயயை திருமணம் செய்தபொழுதே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எப்பொழுது நகல் போட்டு பார்த்தேன் என்றால் சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் நகல் எடுத்து பார்த்தேன். அவ்வாறு நகல் போட்டு பார்த்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி நாகம்மாளின் மகளான எனது மனைவி மூக்காயிக்கு எத்தனை சொத்துக்கள் எழுதிவைக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. பிராது விபரத்தில் 6ம் பிரதிவாதி மூக்காயியை எதற்காக சேர்த்துள்ளீர்கள் என்றால் மூக்காயி பெயரில் 1ம் பிரதிவாதி நாகம்மாள்

எழுதிக்கொடுத்த பத்திரம் உள்ளதால் மூக்காயியை இவ்வழக்கில் 6ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன். மேற்படி பத்திரத்தை நகல் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். மேற்படி நகலை 6 மாதத்திற்கு முன்புதான் நகல் எடுத்து பார்த்தேன். நாகம்மாள் மூக்காயிக்கு என்ன பத்திரம் எழுதி வைத்தார் என்றால் எனக்கு நினைவு இல்லை. மேற்படி பத்திரம் எழுதியபொழுது மூக்காயி உடன் சென்றீர்களா என்றால் இல்லை. நாகம்மாள் எழுதிவைத்த பத்திரத்தில் என்னென்ன சர்வே எண்கள், எத்தனை இலக்க சொத்துக்கள் கண்டுள்ளது என்பது எனக்கு நினைவு இல்லை. அந்த சொத்துக்கள் ராக்கம்மாள் வழியில் நாகம்மாளுக்கு கிடைத்தது என்றால் அது பொதுவாக உள்ள சொத்து. பொதுவாக உள்ள சொத்து என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணம் இல்லை என்றால் ஆவணம் இல்லை, ஆனால் பட்டா உள்ளது. அந்த பட்டா ராக்கம்மாள் பெயரில் உள்ளது. ராக்கம்மாள் பெயரில் உள்ள பட்டா எண் மற்றும் என்னென்ன சர்வே எண்கள் உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் எனக்கு நினைவு இல்லை. 22.11.1989ல் 1ம் பிரதிவாதிக்கும் 3ம் பிரதிவாதிக்கும் அவர்களது தாயார் ராக்கம்மாள் எழுதிவைத்த செட்டில்மெண்ட பத்திரத்தில் என்னென்ன சர்வே எண் சொத்துக்கள் கண்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ராக்கம்மாள் அவரது பெண் மக்களுக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் சான்றிட்ட நகலாக வா.சா.ஆ20 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ராக்கம்மாள் எழுதி வைத்த வா.சா.ஆ,20 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்ட காலத்தில் எனக்கு வயது என்ன என்றால் சிறுவயதாக இருந்தேன். வயது எனக்கு ஞாபகம் இல்லை. எனது மனைவி மூக்காயிக்கு அவரது அம்மா நாகம்மாள் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.23 ஆவணம் ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ,20 ராக்கம்மாள் எழுதிவைத்த ஆவணத்தில் மருதாயியின் பாகம் விலக்காமல் தான் உள்ளது. விலக்கி சொல்லப்பட்டுள்ளதா, அல்லது சேர்த்து சொல்லப்பட்டுள்ளதா என்றால் பொதுவாக சொல்லப்பட்டுள்ளது. ராக்கம்மாள் அவரது சகோதரி, மருதாயிக்குரிய பாகத்தை விலக்கி ராக்கம்மாள் பாகத்தை ம்டும் அவரது மகள்கள் ஆன நாகம்மாளுக்கும், அய்யம்மாளுக்கும் வா.சா.ஆ.20 ஆவணம் மூலம் எழுதி வைத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. பிராது சொத்துவிபரத்தில் 1வது இலக்கமாக கண்டு வரிசை எண் 1 முதல் 7 ஆக குறயீடு செய்யப்பட்டுள்ள 7 சொத்துக்களிலும் எனது தகப்பனாருக்கு எந்த பாகஉரிமையும் இலலை

என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்கள் 1 முதல 7 ராக்கம்மாளுக்கும் அவரது சகோதரி மருதாயிக்கும் மட்டும் பாத்தியமானது என்று சொன்னால் சரியல்ல, 5 பேருக்கும் தான் பாத்தியம். 12.04.1988ல் எனது தகப்பனார் அழகர், அழகிச்சி, கருப்புச்சாமி ஆகிய மூவருக்கும் அவரது தகப்பனார் மார்க்கண்டன் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எழுத்துமூலமாக பாகவிஸ்தி செய்துகொடுத்துவிட்டார் என்றால் இல்லை. மார்க்கண்டன் அவரது மகன்களான எனது தகப்பனார் அழகர், அழகிச்சி, கருப்புச்சாமி ஆகிய மூவருக்கும் பிரித்துக்கொடுத்ததால் தான் தாய் ராக்கம்மாள் வழி சொத்துக்களை ராக்கம்மாள் 22.11.1989ம் தேதி அவரது பெண் மக்களான நாகம்மாள், அய்யம்மாளுக்கு வா.சா.ஆ.20 ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்திவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபரங்கள் எனது தந்தைக்கும் எனக்கும் தெரியும் என்றும் நான் பொய்யாக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.20 ஆவணத்தின்படி அதில் கண்ட சொத்துக்கள் அனைத்தும் நாகம்மாளுக்கும், அய்யம்மாளுக்கு வா.சா.ஆ.20 எழுதப்பட்ட காலத்திலிருந்து அவர்களுக்கு பாத்தியமாக இருந்து அவர்கள் அனுபவத்தில் இருந்துவருகிறது என்றால் சரியல்ல, 5 பேருக்கும் தான் பாத்தியம். 5 பேருக்கும் பாத்தியம் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. எனது மனைவி மூக்காயி சர்வே எண் 127/3ஏ, 127/9 ஆகிய இரண்டு சொத்துக்களையும் அவரது தாயார் நாகம்மாள் எழுதிவைத்த வா.சா.ஆ.23 செட்டில்மெண்ட் ஆவணப்படி அவருக்கு பாத்தியமாகி அவர் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல, 5 பேருக்கும் தான் பாத்தியம். மேற்படி இரண்டு சொத்துக்களுக்கும் பட்டா மூக்காயி பெயரில் மாறியுள்ளது என்றால் சரிதான், தற்பொழுது தான் தெரியவந்தது. தாவா சொத்துக்கள் கூட்டுப்பாத்தியம் இல்லாத நிலையில் வழக்கில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலம்வரை சொத்துக்கள் சம்மந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கும் அவரது சகோரர்களுக்கு இடையே 12.04.1988ல் ஏற்பட்ட பாகவிஸ்திஏற்கனவே மானாமதுரை டி.மு.கோர்ட் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி பாகவிஸ்தி செல்லும் என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் ஏற்பட்ட

**தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. நாகம்மாளுக்கும் 1, 6 ம் பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்துக்களில் பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து நாங்கள் பாகம் கோருவதற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. அது பொதுக்குடும்ப சொத்தாக உள்ளது. மேற்படி சொத்துக்கள் நாகம்மாள், மூக்காயிக்கும் தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் அது பொதுக்குடும்ப சொத்து அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்துக்களை இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது தவறானது என்று சொன்னால் சரியல்ல. நானும் எனது மனைவியும் 20 வருடங்களாக பிரிந்துஇருப்பதால் முன்விரோதம் கொண்டு 1, 6 பிரதிவாதிகளாக இவ்வழக்கில் சேர்த்து வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.**

**1ம் பிரதிவாதியின் தரப்பு கு.வி 6ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**2, 3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகின்றது.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை